

## ஒரு துவைக்கும் இயந்திரத்தை எவ்வாறு தேர்வு செய்வது ?

**01**
உங்கள் வீட்டின் தேவைக்கு ஏற்ற துவைக்கும் இயந்திரத்தைத் தேர்வு செய்யுங்கள்.

**02**
அதில் அதிக அடையாளக்குறிகள் உள்ளதை தேர்ந்தெடுங்கள்

**03**
ஒவ்வொரு முறை துணி துவைப்பதற்கு ஆகக் குறைவான தண்ணீரைப் பயன்படுத்தும் இயந்திரத்தை தேர்ந்தெடுங்கள்.

## தண்ணீரை மறுபயனீடு செய்ய சில குறிப்புகள்



**01**
துணி துவைக்கும் இயந்திரத்தின் முழு கொள்ளளவையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்



**02**
தண்ணீர் சுழற்சியின் எண்ணிக்கையை சரியாகத் தேர்ந்தெடுங்கள். அது தண்ணீர் வீணாவதைத் தவிர்க்கும்



**03**
கடைசி சுழற்சியில் பயன்படுத்தப்படும் தண்ணீரை கழிவறை கழுவவோ, தரையைத் துடைக்கவோ பயன்படுத்துங்கள்.




# அதிகம் சேமியுங்கள்

தண்ணீரை திறன்மிக்க வழியில் பயன்படுத்தும் துவைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இது சாத்தியமாகும்.

PUB SINGAPORE'S NATIONAL WATER AGENCY

www.pub.gov.sg

Published in April 2017
Revised in March 2018

# கட்டாய செயல்திறன் ஒட்டுவில்லைத் திட்டம் என்றால் என்ன ?

ஒரு பொருள் தண்ணீரை எவ்வளவு திறம்படப் பயன்படுத்தும் என்பதைக் குறிப்பதற்கான தரவரிசை முறையே கட்டாயச் செயல்திறன் ஒட்டுவில்லைத் திட்டம்.

## அந்த ஒட்டுவில்லையை எவ்வாறு படிப்பது?

1. அடையாளக்குறி அதிகமாக இருக்கும் பொருட்கள், தண்ணீரை ஆக அதிகத் திறனுடன் பயன்படுத்தும்.
2. ஒட்டுவில்லை, ஒரு பொருளின் தண்ணீர் பயன்பாடு, விதம், மாதிரி ஆகியவற்றைக் காண்பிக்கும்.
3. எல்லா ஒட்டுவில்லைகளிலும், பதிவுசெய்யப்பட்ட எண் அல்லது தகுதித்திறன் குறியீடு இருக்கும்.




## வீட்டில் தண்ணீர் பயனீட்டின் முக்கிய கூறுகள் (2016/2017)

- 27% குளித்தல்
- 18% தண்ணீரைப் பாய்ச்சி அடித்தல்
- 16% சமையலறை
- 15% துணி துவைத்தல்
- 12% குளியலறை குழாய்
- 6% கழுவும் தொட்டி
- 6% மற்றவை

## என்ன புதிது ?

2017- ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இரண்டு, மூன்று மற்றும் நான்கு அடையாளக்குறிகள் உள்ள துவைக்கும் இயந்திரங்கள் சிங்கப்பூரில் விற்பனை செய்ய அனுமதிக்கப்படும்.

## நான் ஏன் தண்ணீரை சேமிக்க வேண்டும்?

PUB, தேசிய தண்ணீர் முகவை, நான்கு தேசிய குழாய்களின்மூலம், சிங்கப்பூருக்கு நிலையாக தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்கிறது. இருப்பினும், தண்ணீர் ஒரு விலைமதிப்பற்ற வளம். தண்ணீரைத் திறமையாகப் பயன்படுத்துவதால், அது நிலையாகக் கிடைப்பதை உறுதி செய்துகொள்ளமுடியும். அதன் மூலம் நாம் நமது பங்கை ஆற்றலாம்.




## சேமிக்கப்படும் தண்ணீரின் அளவு

தண்ணீர் சேகரிப்பு முறைகள் ஏழு கிலோ கொள்ளளவு கொண்ட துணி துவைக்கும் இயந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருக்கிறது.

வரைபடம் (இடது) திறமையான துணி துவைக்கும் இயந்திரத்தை மற்றும் அடையாள குறிகள் இல்லாத துணி துவைக்கும் ஏழு கிலோ கொள்ளளவு துணி துவைக்கும் இயந்திரத்தை கொண்டு ஒப்பிடப்பட்டுள்ளது.

## தண்ணீரைச் சேமிக்க அதிக அடையாளக்குறிகள் உள்ள பொருட்களைத் தேர்ந்தெடுங்கள்.

தண்ணீரைத் திறம்படப் பயன்படுத்தும் பொருட்களை வாங்கி தண்ணீர் சேகரிப்பை வாழ்க்கையின் அன்றாடச் செயல்பாடாகப் பலர் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றனர். அது PUB, தேசிய தண்ணீர் முகவை நடத்திய கருத்தாய்வில் தெரியவந்தது.

சந்தைப் பங்கில், மூன்று அடையாளக் குறிகள் கொண்ட துவைக்கும் இயந்திரங்களின் விற்பனை. (%)




ஆதாரம்: சிங்கப்பூருக்கான, GFK சில்லறை விற்பனை தணிக்கையின் கண்டுபிடிப்புகள்.